# விளையாட்டுத்துறை அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2011 ஆம் ஆண்டு

இந்த அறிக்கை இரண்டு பகுதிகளைக் கொண்டதாகும்.

பகுதி I - அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களத்தின் கணக்குகள் தொடர்பான சுருக்கமான அறிக்கை

பகுதி 2 - ஒவ்வொரு ஒதுக்கீட்டுத் தலைப்பிற்குமான விபரமான அறிக்கை.

## பகுதி I

## விளையாட்டுத்துறை அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களத்தினதும் கணக்குகள் தொடர்பான சுருக்கமான அறிக்கை

### 1. அமைச்சின் கீழுள்ள திணைக்களம்

| செலவினத் தலைப்பு | திணைக்களப் பெயர் |
|---|---|
| 219 | விளையாட்டுத்துறை அபிவிருத்தித் திணைக்களம் |

### 2. கணக்குகள்

### 2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு

### (அ) மொத்த ஏற்பாடுகள் மற்றும் செலவினம்

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களங்களிற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய ஏற்பாடு ரூபா 2,238,639,602 ஆனதுடன் இதில் மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 2,035,910,288 தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம், அமைச்சினதும் திணைக்களங்களினதும் ஒவ்வொரு தேறிய ஏற்பாடுகளுக்கான தேறிய சேமிப்பு முறையே ரூபா 17,576,959 தொகையும் ரூபா 184,697,355 தொகையுமான வீச்சிலான அளவில் அதாவது மொத்த தேறிய ஏற்பாட்டில் 2.10 சதவீதத்திற்கும் 13.17 சதவீதத்திற்கும் இடையிலான வீச்சில் நிலவியது. விபரம் பின்வருமாறாகும்.

| ஒதுக்கீட்டுத் தலைப்பு | அமைச்சு /திணைக்களம் | தேறிய ஏற்பாடு | | பயன்பாடு | | சேமிப்பு | |
|---|---|---|---|---|---|---|---|
| | | மீண்டெழுபவை | மூலதனம் | மீண்டெழுபவை | மூலதனம் | மீண்டெ முபவை | மூலதனம் |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 136 | விளையாட்டுத் துறை அமைச்சு | 332,235,000 | 504,949,602 | 316,607,628 | 502,545,015 | 15,627,372 | 1,949,587 |
| 219 | விளையாட்டுத் துறை அபிவிருத்தித் திணைக்களம | 266,505,000 | 1,134,950,000 | 246,332,047 | 970,425,598 | 20,172,953 | 164,524,402 |
| | மொத்தம் | 598,740,000 | 1,639,899,602 | 562,939,675 | 1,472,970,613 | 35,800,325 | 166,473,989 |

## 2.2 முற்பணக் கணக்குகள்

### 2.2.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்

#### (அ) கணக்குகள் சமர்ப்பித்தல்

விளையாட்டுத்துறை அமைச்சால் மீளாய்வாண்டிற்காகத் தயாரிக்கப்பட வேண்டிய அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு 2012 மார்ச் 31 இல் உள்ளவாறு கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் விளையாட்டுத்துறை அபிவிருத்தித் திணைக்களத்தால் 2012 ஏப்ரல் 25 ஆம் திகதி அதாவது 25 நாட்கள் தாமதத்தின் பின்னர் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

#### (ஆ) எல்லைகள் பின்பற்றப்படல்

அமைச்சு மற்றும் திணைக்களத்திற்கு அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகளுக்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகள் பின்பற்றப்பட்டிருக்கவில்லை.

## 2.3 பொது வைப்புக் கணக்குகள்

2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அமைச்சு மற்றும் திணைக்களத்தின் பொது வைப்புக் கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 97,264,235 ஆனதுடன் அமைச்சு மாத்திரம் இது தொடர்பான காலப்பகுப்பாய்வைச் சமர்ப்பித்திருந்தது. விபரம் பின்வருமாறாகும்.

| அமைச்சு / திணைக்களம் | ஒதுக்கீட்டுத் தலைப்பு | காலப்பகுப்பாய்வு | | | 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|---|---|---|---|
| | | 1 ஆண்டிற்குக் குறைவானவை | 1 ஆண்டிற்கு மேற்பட்ட 2 ஆண்டுகளுக்குக் குறைவானவை | 2 ஆண்டுகளுக்கு மேற்பட்ட 5 ஆண்டுகளுக்குக் குறைவானவை | |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| விளையாட்டுத்துறை அமைச்சு | 136 | 919,540 | 5,727 | 12,303 | 937,570 |
| மொத்தம் | | 919,540 | 5,727 | 12,303 | 937,570 |

# பகுதி II

## ஒவ்வொரு ஒதுக்கீட்டுத் தலைப்பிற்குரிய விபரமான அறிக்கை

## 1. ஒதுக்கீட்டுத் தலைப்பு 136 - விளையாட்டுத்துறை அமைச்சு

### 1.1 கணக்காய்வின் நோக்கெல்லை

விளையாட்டுத்துறை அமைச்சின் 2011 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கை, இணக்கக் கூற்றுக்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் உள்ளடக்கப்பட்ட ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையில் உள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2012 திசெம்பர் 26 ஆம் திகதி அமைச்சின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது. கணக்குகள்

மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள், கருத்துரைகள், மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களின் மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகளது, போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு உள்ளடக்கத்தினை கொண்டு காணப்படுகின்றது.

## 1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக் கூற்று என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரச நிதி மற்றும் நிர்வாக பிரமாணங்களுக்கு இணங்க பேணப்பட்டு வருதல், தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும், இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமான முறையில் சமர்ப்பிக்கப்படுவதற்கு உரியவகையிலான உள்ளகக்கட்டுப்பாடுகளைத் தயாரித்தல், செயற்படுத்தல் மற்றும் நடாத்தலும் இப் பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

## 1.3 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள்

2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதியறிக்கைகள் மற்றும் புத்தகங்களின் பிரகாரம், இளைஞர் விவகார, திறன்கள் அபிவிருத்தி அமைச்சின் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்று, இதன் (அ) முதல் (ஈ) வரையில் காண்பிக்கப்பட்டுள்ள பொது அவதானிப்புக்கள் மற்றும் 1.4 முதல் 1.6 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புகள் தவிர்ந்தவை, திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளதாக அவதானிக்கப்பட்டுள்ளது.

**(அ) பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்பட்டிராமை**

(i) அமைச்சால் பின்வரும் பதிவேடுகள் பேணப்பட்டிராததுடன் சில பதிவேடுகள் முறையாகவும் நாளதுவரையாகவும் பேணப்பட்டிராமை தெரிவுக் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

| பதிவேட்டு வகை | உரிய பிரமாணங்கள் | அவதானிப்புகள் |
|---|---|---|
| நிலையான சொத்துப் பதிவேடு | 2004 பெப்ரவரி 20 ஆம் திகதிய 402(1) ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை, 2004 ஒக்டோபர் 18 ஆம் திகதிய 174 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை மற்றும் நிதிப் பிரமாணம் 802 | நிலையான சொத்துப் பதிவேடு தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. |
| கணனி உதிரிப்பாகங்கள் மற்றும் மென்பொருள் தொடர்பான நிலையான சொத்துப் பதிவேடு | 2002 நவம்பர் 18 ஆம் திகதிய ஐஏஜ 2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | நிலையான சொத்துப் பதிவேடு தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. |

(ii) 1993 இன் 47 ஆம் இலக்க விளையாட்டு (திருத்தப்பட்ட) அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் சகல விளையாட்டுக் கழகங்களாலும் வருடாந்த கணக்குக் கூற்றுக்கள் கணக்காய்விற்காக கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் நியமிக்கப்படும் தகைமையுடைய கணக்காய்வு நிறுவகம் ஒன்றிற்குச் சமர்ப்பித்து அடுத்துவரும் ஆண்டின் பெப்ரவரி 28 ஆம் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறும் விளையாட்டுக் கழகத்தால் பின்வருமாறு கணக்குகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| ஆண்டு | சமர்ப்பிக்கப்பட்டிராத கணக்குகளின் எண்ணிக்கை |
|---|---|
| 2009 | 60 |
| 2010 | 07 |
| 2011 | 11 |

**(ஆ) பாதீட்டு முரண்கள்**

(i) 136 தலைப்பின் கீழ் 05 செலவின விடயங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 680,000 தொகையான மொத்த தேறிய ஏற்பாடும் எஞ்சியிருந்தது.

(ii) 18 செலவின விடயங்களுக்காக மிகை ஏற்பாடு செய்யப்பட்ட காரணத்தால் ஏற்பாடு பயன்படுத்தப்பட்டதை அடுத்து ரூபா 12,189,619 கூட்டுத்தொகையான சேமிப்பு காணப்பட்டதுடன் இது தேறிய ஏற்பாட்டில் 76 சதவீதத்திற்கும் 11 சதவீதத்திற்கும் இடைப்பட்ட வீச்சைக் கொண்டிருந்தது.

(iii) 03 மீண்டெழும் செலவின விடயங்களுக்கு ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 2,700,000 தொகையான மொத்த ஏற்பாடும் சேமிக்கப்பட்டு வேறு செலவின விடயங்களுக்கு மாற்றப்பட்டிருந்தன.

**(இ) பொது வைப்புக் கணக்கு**

02 வருட காலத்திற்கு மேலாக பொது வைப்புக் கணக்கில் நிலவிய ரூபா 12,303 தொகையான மீதி மீளாய்வாண்டின் வருமானத்திற்கு செலவு வைக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஈ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக்கூற்று**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(i) சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளின் படி, 2011 திசெம்பர் இல் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாகக் காணப்பட்ட மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 71,484 ஆனதுடன் இது 2008 சனவரி 18 ஆம் திகதி சேவையிலிருந்து விலக்கப்பட்ட ஒரு உத்தியோகத்தருக்கு உரிய மீதி காணப்பட்டது. இம் மீதியை அறவிடுவது தொடர்பாக பின்தொடர் நடவடிக்கை நலிவான நிலையில் காணப்பட்டது.

(ii) திணைக்களப் புத்தகங்களின் படியான மீதி ரூபா 14,204,446 ஆகக் காணப்பட்டதுடன் திறைசேரிப் புத்தகங்களின் படியான மீதி ரூபா 14,379,944 ஆகக் காணப்பட்டது. இதன் பிரகாரம், ரூபா 175,498

தொகையான வேறுபாடு நிலவியதுடன் இவ்வேறுபாட்டைத் தீர்ப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) 1994 ஆகஸ்ட் 18 ஆம் திகதிய 90 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 4 ஆம் பந்தியின் பிரகாரம் கணக்குகளுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டிய தனியான மீதி வகையீட்டுப் பொழிப்பின் கூட்டுத்தொகை கட்டுப்பாட்டுக் கணக்கின் வருட இறுதியிலுள்ள மீதியுடன் ஒப்பீட்டு கூற்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) அங்கத்துவக் கடன் பதிவேடு காலாண்டு ரீதியாக தீர்க்கப்பட்டு மீதி முன்கொண்டு செல்லப்பட வேண்டிய போதிலும் அங்கத்துவக் கடன் பதிவேடு (சீ.சீ. 10) சமப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(v) திறைசேரி அச்சீட்டுடன் திணைக்களப் புத்தகங்கள் ஒப்பிடப்படுவதற்கு உரிய இணக்கக் கூற்று தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் இணக்கத்திற்காக தயாரிக்கப்பட வேண்டிய முற்பணக் கணக்கு தொடர்பான கட்டுப்பாட்டுக் கணக்கு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 1.4 சொத்து முகாமைத்துவம்

### தீர்க்கப்படாத பொறுப்புகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) அமைச்சால் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான தீர்க்கப்படாத பொறுப்புகள் ரூபா 1,994,498 தொகையானதுடன் இது 01 ஆண்டிற்குக் குறைவானவையாகக் காணப்பட்டன.

(ii) தொலைபேசிச் செலவினத்திற்கான பொறுப்புகள் ரூபா 53,301 ஆல் ஒதுக்கீட்டுக் கணக்கில் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

## 1.5 இணக்கமின்மைகள்

### சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் முதலியவற்றுடன் இணங்காமை

தெரிவுக் கணக்காய்வுச் செவ்வையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளுக்கு இணங்காத சந்தர்ப்பங்கள் விபரிக்கப்பட்டு கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான தொடர்பு | பெறுமதி | இணக்கமின்மை |
|---|---|---|---|
| | | ரூபா | |
| (i) | நிதிப் பிரமாணம் | | |
| | நி.பி. 103 | 389,111 | 04 வாகனங்களுக்கு ஏற்பட்டிருந்த விபத்துக்கள் தொடர்பாக காப்புறுதி நட்டஈட்டு விபரம் நட்டங்கள் மற்றும் இழப்புப் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. |
| | நி.பி. 1645 | - | அமைச்சிற்கு உரித்தான 19 வாகனங்களுக்கு உரித்தான சம்பவக் குறிப்பேடு பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | சுற்றறிக்கையின் ஏற்பாடு | | |
| | திறைசேரிச் சுற்றறிக்கை | | |
| | 2011 நவம்பர் 29 ஆம் திகதிய 220/ 2011 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கை | 226,535 | 05 வாகனங்களுக்கு ஏற்பட்டிருந்த விபத்துக்கள் ஒதுக்கீட்டுக் கணக்கின் மூலம் வெளிக்காட்டப்பட்டிருக்கவில்லை. |

## 1.6 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியும் உள்ளபடியான பதவியணியும்**

2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஊழியர் எண்ணிக்கை தொடர்பான நிலை பின்வருமாறாகக் காணப்பட்டது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணி | உள்ளபடியான பதவியணி | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட மட்டம் | 12 | 10 | 02 |
| (ii) | மூன்றாம் மட்டம் | 02 | 02 | - |

| | | | | |
|---|---|---|---|---|
| (iii) | இரண்டாம் மட்டம் | 33 | 25 | 08 |
| (iv) | ஆரம்ப மட்டம் | 25 | 25 | - |
| | | ----- | ----- | ------ |
| | மொத்தம் | 72 | 62 | 10 |
| | | === | === | === |

## 2. ஒதுக்கீட்டு தலைப்பு - 219 விளையாட்டு அபிவிருத்தி திணைக்களம்

### 2.1 கணக்காய்வின் நோக்கெல்லை

விளையாட்டு அபிவிருத்தி திணைக்களத்தின் 2011 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கை, இணக்கக் கூற்றுக்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் உள்ளடக்கப்பட்ட ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் வருமானக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையில் உள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2012 திசெம்பர் 15 ஆம் திகதி திணைக்களப் பணிதலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள், கருத்துரைகள், மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களின் மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகளது, போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு உள்ளடக்கத்தினை கொண்டு காணப்படுகின்றது.

### 2.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

ஒதுக்கீட்டுக் கணக்கு, மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரச நிதி மற்றும் நிர்வாக பிரமாணங்களுக்கு இணங்க பேணப்பட்டு வருதல், தயாரித்தல் மற்றும்

நியாயமாகச் சமர்ப்பித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற வகையிலான நிதி அறிக்கைகள், இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றை தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பிக்கப்படுவதற்குரிய உள்ளகக்கட்டுப்பாடுகளைத் தயாரித்தல், செயற்படுத்தல் மற்றும் நடாத்தலும் இப் பொறுப்பில் உள்ளடங்கும்.

## 2.3 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள்

2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதியறிக்கைகள் மற்றும் புத்தகங்களின் பிரகாரம், திணைக்களத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கு வருமானக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்களில் (அ) முதல் (ஊ) வரையில் காண்பிக்கப்பட்டுள்ள பொது அவதானிப்புக்கள் மற்றும் 2.4 முதல் 3.14 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புகள் தவிர்ந்தவை, திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளதாக அவதானிக்கப்பட்டுள்ளது.

### (அ) பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்பட்டிராமை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) திணைக்களத்தினால் பின்வரும் பதிவேடுகள் பேணப்பட்டிராததுடன் சில பதிவேடுகள் முறையாகவும் நாளதுவரையாகவும் பேணப்பட்டிராமை தெரிவுக் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

| பதிவேட்டு வகை | உரிய பிரமாணங்கள் | அவதானிப்புகள் |
|---|---|---|
| நிலையான சொத்துப் பதிவேடு | 2004 பெப்ரவரி 20 ஆம் திகதிய 402(1) ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை, 2004 ஒக்டோபர் 18 ஆம் திகதிய 174 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை மற்றும் நிதிப்பிரமாணம் 802 | நிலையான சொத்துப் பதிவேடொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. இது முன்னைய ஆண்டு அறிக்கைகளிலும் காண்பிக்கப்பட்டிருந்தது. |
| நட்டங்கள் மற்றும் இழப்புகள் பதிவேடு | நிதிப் பிரமாணம் 110 | தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| கணனி உதிரிப்பாகங்கள் மற்றும் மென்பொருள் தொடர்பான நிலையான சொத்துப் பதிவேட்டு | 2002 நவம்பர் 28 ஆம் திகதிய இல. ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| கட்டுப்பாட்டு அறிக்கை | 2002 செப்தெம்பர் 12 ஆம் திகதிய 402 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | கட்டுப்பாட்டு அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |

(ii) திணைக்களத்திற்கு மீளாய்வாண்டின் போது சமர்ப்பிக்கப்பட்ட 02 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதில்கள் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறும் சமர்ப்பிக்கப்பட்டிராததுடன் அவ் ஐயவினாக்களுக்கு உரிய கணக்கீடு செய்யப்படக்கூடிய கொடுக்கல்வாங்கல்களின் பெறுமதி ரூபா 229,141,293 ஆகக் காணப்பட்டது.

(iii) நுவரெலியா குதிரைப் பந்தயத் திடலுக்கு அண்மித்த கட்டிட நிர்மாணிப்பு தொடர்பான செயற்திட்டத்திற்காக 2008, 2009, 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளின் போது ரூபா 179,569,597 கூட்டுத்தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன் ஒப்பந்தக் கொடுப்பனவு பதிவேடு ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) பாதீட்டு முரண்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) 219 தலைப்பின் கீழ் ஒரு செலவின விடயத்திற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 150,000 தொகையான மொத்த தேறிய ஏற்பாடும் எஞ்சியிருந்தது.

(ii) 09 செலவின விடயங்களுக்கான மேலதிக ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த காரணத்தினால் ஏற்பாடுகள் பயன்படுத்தப்பட்டதை அடுத்து ரூபா 5,814,689 சேமிக்கப்பட்டிருந்ததுடன்

இது அச் செலவின விடயங்களுக்கு உரித்தான தேறிய ஏற்பாட்டில் 67 சதவீதம் முதல் 6 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது.

**(இ) கூட்டிணைந்த திட்டம்**

2003 யூன் 02 ஆம் திகதி பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.1.1 ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்தால் கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஈ) வருடாந்த செயல் நடவடிக்கைத்திட்டம்**

2003 யூன் 02 ஆம் திகதி பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.1.2 ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்தால் கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**(உ) பொது வைப்புக் கணக்கு**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) 2011 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு பொது வைப்புக் கணக்குகள் ரூபா 96,326,664 தொகையான மீதியானதுடன் இது தொடர்பான காலப்பகுப்பாய்வு கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) நிதிப் பிரமாணம் 427 இன் ஏற்பாடுகளின் பிரகாரம் பொது வைப்புக் கணக்குகளின் மீதி திறைசேரிப் புத்தகங்களுடன் மாதாந்தம் ஒப்பிடப்பட்டு தவறுகள் இருப்பின் அவை அச்சந்தர்ப்பத்திலேயே சீராக்கப்பட வேண்டிய போதிலும் திணைக்களத்தால் மாதாந்த இணக்கக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. இதன் பிரகாரம் இறுதி திறைசேரி அச்சீட்டுக் குறிப்பை அடிப்படையாகக் கொண்டு ஒதுக்கீட்டுக் கணக்கு தயாரிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(iii) நிதிப் பிரமாணம் 565(3) இன் பிரகாரம், பேரேட்டின் இறுதிப் பக்கங்கள் சில மாற்றப்பட்டு சமப்படுத்தல் கணக்கு தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் அம் மாதாந்த சமப்படுத்தல் கணக்கு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) நிதிப் பிரமாணம் 565(5) இன் பிரகாரம், ஒவ்வொரு மாதத்திற்காகவும் பொது 71 படிவத்தில் தயாரிக்கப்பட வேண்டிய மாதாந்த வைப்புக்களின் பொழிப்பு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(v) நிதிப் பிரமாணம் 570 இன் பிரகாரம், காலங்கடந்த சகல வைப்புக்களும் அரசாங்க வருமானத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டிய போதிலும் வைப்புக்கள் தொடர்பான காலப்பகுப்பாய்வொன்று கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிராமையால் திணைக்களத்தில் காலங்கடந்த வைப்புகள் உள்ளனவா என்பது குறித்து கணக்காய்வின் போது உறுதிப்படுத்த முடியாதிருந்தது

**(உ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக்கூற்று**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) நிதிப் பிரமாணம் 453 இன் பிரகாரம், அமைய மற்றும் நாளாந்த சம்பளத்தைப் பெறும் ஊழியர்கள் தவிர்ந்த ஏனைய சகல பதவியணிக்காகவும் சம்பளப் பதிவேடு ஒன்று பேணப்பட வேண்டிய போதிலும் அப் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. கணனியின் மூலம் பெற்றுக்கொள்ளப்படும் மாதாந்த தரவுகள் மாத்திரம் உள்ளடக்கப்பட்ட ஓர் அறிக்கை பேணப்பட்டிருந்தது.

(ii) திணைக்கள உத்தியோகத்தர் ஒருவரிடமிருந்து 2011 பெப்ரவரி 15 ஆம் திகதியில் உள்ளவாறு அறவிட வேண்டியிருந்த ரூபா 67,114 தொகையான இடர் கடன் தொகைக்குரிய கடன் தவணைப்பணம் 2011 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(iii) 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலவிய ரூபா 268,898 தொகையான கடன்கொடுத்தோர் மீதிக்கு உரித்தான உத்தியோகத்தர்கள் இடமாற்றலாகி திணைக்களத்திற்கு வருகை தந்த நாட்கள் தொடர்பான விபரம் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிராமையால் மீதியைத் தீர்ப்பதிலான தாமதம் நிலவியதா என்பது குறித்து உறுதிப்படுத்த முடியாதிருந்தது.

## 2.4. சொத்துக்கள் முகாமைத்துவம்

### (அ) வருடாந்த பொருள் மெய்மையாய்வு நடாத்தல்

நிதிப் பிரமாணம் 756 மற்றும் 2008 நவம்பர் 19 ஆம் திகதிய அரச நிதிச் சுற்றறிக்கை இல. 436 இன் பிரகாரம், திணைக்களத்தால் தலைமை அலுவலகம் மற்றும் 18 மாவட்ட அலுவலகங்கள் வருடாந்தம் பொருள் மெய்மையாய்வை நடாத்த வேண்டிய பொதிலும் 2010 ஆம் ஆண்டிற்காக பொருள் மெய்மையாய்வு நடாத்தப்பட்டிருக்கவில்லை. 2011 ஆம் ஆண்டிற்காகவும் 04 மாவட்ட அலுவலகங்கள் மற்றும் வருடாந்தம் பொருள் மெய்மையாய்வை தலைமை அலுவலகத்தின் 03 பிரிவுகளில் பொருள் மெய்மையாய்வு நடாத்தப்பட்டிருக்கவில்லை.

### (ஆ) தீர்க்கப்படாத பொறுப்புகள்

திணைக்களத்தால் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தீர்க்கப்படாத பொறுப்புகள் ரூபா 102,157,632 ஆகக் காணப்பட்டதுடன் இப் பொறுப்புகள் ஒரு வருடத்திற்கும் குறைவான காலப்பகுதிக்கு உரித்தானவையாகும்.

## 2.5 இணங்காமைகள்

### சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

தெரிவுக் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் விபரித்துக் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் |
|---|---|---|---|
| | | ரூபா | |
| **(i)** | **நிதிப் பிரமாணம்** | | |
| (i) | நி.பி. 94 | 736,755 | வருடாந்த மதிப்பீடுகளின் நிதி ஏற்பாடுகள் போதியளவில் இருந்தாலன்றி எவ்வித செலவினத்திற்கும் பொறுப்பிற்கும் உட்படலாகாத போதிலும் செலவின விடய |

| | | | |
|---|---|---|---|
| | | | இல. 219-2-2-1405 இல் செலவினம் மேற்கொள்ளப்பட்டதை அடுத்து சேமிப்பை விஞ்சிய பொறுப்புகள் உட்பட்டிருந்தன. |
| (ii) | நி.பி. 735(2) | - | 219 ஆவது பொதுப் படிவத்தின் பிரகாரம், பொருள் பெறுவனவுப் பத்திரம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |

**(ii) திறைசேரிச் சுற்றறிக்கை**

| | | | |
|---|---|---|---|
| (i) | 2011 பாதீடு தயாரித்தல் தொடர்பான வழிகாட்டல் கோவை | 2,057,694 | உள்ளபடியான ஊழியர் தேவைப்பாட்டின் படி பதவியணி சம்பளம் கணிப்பிடப்பட வேண்டிய போதிலும் பதவியணி வெற்றிட எண்ணிக்கையையும் அடிப்படையாகக் கொண்டு கணிப்பிடப்பட்டமையால் செலவின விடய இல. 219-2-2-1001 இல் பணம் எஞ்சியிருந்தது. |
| (ii) | 1994 யூலை 12 ஆம் திகதிய 35/94 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் 4.3.3 ஆம் பந்தி | 101,413,648 | பொறுப்புகளை உறுதிப்படுத்துவதற்காக உரிய நிறுவனங்களிடமிருந்து உறுதிப்படுத்தல்கள் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

## 2.6 செயற்திட்ட அமுலாக்கலிலான நலிவுகள்

செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்படாது கைவிடப்பட்டமை, செயற்திட்டங்கள் இடைநடுவில் நிறுத்தப்பட்டமை மற்றும் பணம் விடுவிக்கப்பட்டிருந்த போதிலும் முன்னேற்றமடைந்திராத செயற்திட்டங்கள் தொடர்பாக கணக்காய்வு தெரிவுச் செவ்வையின் போது கண்டறியப்பட்ட சந்தர்ப்பங்கள் பின்வருமாறாகும்.

### 2.6.1 செயற்திட்டம் செயற்படாது கைவிடப்பட்டமை

**(அ) நுவரெலியா குதிரைப் பந்தய மைதான விளையாட்டுக் கட்டிடத் தொகுதி நிர்மாணிப்பு**

2008 ஆகஸ்ட் 04 ஆம் திகதிய அமைச்சரவை அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் பிரகாரம் மேற்குறித்த செயற்பாட்டிற்கான ரூபா 409,947,888 தொகையான கிரய மதிப்பீட்டிற்கு 2008 ஆகஸ்ட் 27 ஆம் திகதி அமைச்சரவையால் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. எனினும், திட்டங்கள் முறைப்படி சமர்ப்பிக்கப்படாத காரணத்தால் 2009 மார்ச் 06 ஆம் திகதி இலங்கை காணி சீர்திருத்த மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தால் இம் மதிப்பீடு ரூபா 227,670,000 இற்கு திருத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம், 2009 ஒக்டோபர் 29 ஆம் திகதி நிர்மாணிப்பு நடவடிக்கைகளுக்காக காணி சீர்திருத்த மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்துடன் 2008 மே 15 ஆம் திகதி கண்காணிப்பு நடவடிக்கைகளுக்காக மதியுரை சேவை உடன்படிக்கை நகர அபிவிருத்தி அதிகாரசபையுடனும் கைச்சாத்திடப்பட்டிருந்தது. இதன் பிரகாரம், இச் செயற்திட்டம் அமுலாக்கப்படுவதற்காக 2008, 2009 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளின் போது முறையே ரூபா 51,603,870, ரூபா 49,201,382 மற்றும் ரூபா 78,762,350 ஆக ரூபா 179,567,602 கூட்டுத்தொகையான செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. எனினும் மத்திய சுற்றாடல் அதிகாரசபையால் சுற்றாடல் அங்கீகாரம் பெற்றிராத காரணத்தால் நிர்மாணிப்பு நடவடிக்கைகளை உடனடியாக நிறுத்துமாறு மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் 08/ஈஐஏ/03/2209 ஆம் இலக்க 2009 நவம்பர் 03 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் பணிப்பாளர் நாயகத்திற்கு (விளையாட்டு அபிவிருத்தி திணைக்களம்) அறிவிக்கப்பட்டிருந்ததுடன் 2010 ஆகஸ்ட் 26 ஆம் திகதி முதல் அந் நிர்மாணிப்பு நடவடிக்கைகள் கைவிடப்பட்டிருந்தன.

(ஆ) டொரிங்டன் விளையாட்டு மைதானத்தில் செயற்கை ஓட்டத்திடலை நிர்மாணித்தல்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) டொரிங்டன் விளையாட்டு மைதானத்தில் செயற்கை ஓட்டத்திடலை நிர்மாணிப்பது தொடர்பாக விளையாட்டு மற்றும் பொது விநோத நடவடிக்கைகளுக்காக அமைச்சால் 2009 யூன் 05 ஆம் திகதி

சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவைப் பத்திரத்தின் பிரகாரம், அமைச்சரவையால் இந் நிர்மாணிப்பிற்கு உரித்தான ஒப்பந்தம் ரூபா 220,000,000 தொகையான மதிப்பீட்டுத் தொகைக்கு அரச பொறியியல் கூட்டுத்தாபனத்திற்கு கையளிப்பதற்கு 2009 யூன் 17 ஆம் திகதி அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. இதன் படி 2009 ஆகஸ்ட் 04 ஆம் திகதிய கி.சங்./சங் 3/1/165 ஆம் இலக்க விளையாட்டு அபிவிருத்தி பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் மூலம் இச் செயற்திட்டத்தின் நிர்மாண நடவடிக்கைகள் அரச பொறியியல் கூட்டுத்தாபனத்திடம் கையளிக்கப்பட்டிருந்தது. எனினும், மேற்குறித்த மதிப்பீடு ரூபா 278,913,624 ஆக மீள திருத்தப்பட்டு 2009 செப்தெம்பர் 30 ஆம் திகதி விளையாட்டு அமைச்சால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த அமைச்சரவைக் குறிப்பின் பிரகாரம், செயற்திட்டத்திற்கு தேவையான மேலதிக ஏற்பாடு 2010 ஆம் ஆண்டின் போது வழங்கும் நிபந்தனையின் கீழ் திருத்தப்பட்ட மதிப்பீட்டிற்கான அங்கீகாரம் 2009 ஒக்டோபர் 14 ஆம் திகதிய அமைச்சரவையால் வழங்கப்பட்டிருந்ததுடன் இதன் பிரகாரம் திணைக்களத்தால் 2009 நவம்பர் 25 ஆம் திகதிய கிரீசங்தெ/சங;/3/7/2 ஆம் இலக்க கடிதத்தின் மூலம் திருத்தப்பட்ட தொகைக்கு மீள இவ் ஒப்பந்தம் அரச பொறியியல் கூட்டுத்தாபனத்திடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. இதனை அடுத்து 2009 திசெம்பர் 17 ஆம் திகதி அரச பொறியியல் கூட்டுத்தாபனத்திற்கும் விளையாட்டு அமைச்சிற்கும் இடைப்பட்ட இவ் ஒப்பந்தத்திற்கு உரித்தான உடன்படிக்கைக்கு உட்பட்டிருந்ததுடன் உடன்படிக்கையின் படி 2010 யூலை 12 ஆம் திகதிய ஒப்பந்தம் பூர்த்தியடைவதற்கிருந்த போதிலும் அந் நாள் வரை நிர்மாணிப்பு நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 2009 திசெம்பர் 02 ஆம் திகதி வரை வழங்கப்பட்ட சேவைகள் மற்றும் மதியுரைக் கட்டணத்தை உள்ளடக்கி 2009 திசெம்பர் 21 ஆம் திகதி அரச பொறியியல் கூட்டுத்தாபனத்தால் முதலாவது உள்ளகக் கொடுப்பனவுச் சிட்டை மூலம் ரூபா 163,602,458 தொகை கோரப்பட்டிருந்தது. இதன் பிரகாரம், திட்ட மற்றும் நிர்மாணிப்புக் கட்டணங்களில் 20 சதவீதம் உள்ளடங்கலாக பெறுமதி சேர் வரி உள்ளடங்கலாக ரூபா 78,978,410 தொகையான முற்பணத் தொகைக் கொடுப்பனவு விளையாட்டு அமைச்சுப் பொறியியலாளரால்

பரிந்துரைக்கப்பட்டிருந்த போதிலும் 2009 திசெம்பர் 31 ஆம் திகதிய 5869 ஆம் இலக்க உறுதிச்சீட்டின் மூலம் ரூபா 10,000,000 தொகையான முற்பணத் தொகை அரச பொறியியல் கூட்டுத்தாபனத்திற்குச் செலுத்தப்பட்டிருந்தது. எனினும், கணக்காய்வுத் தினமாகிய 2011 நவம்பர் மாதம் வரை நிர்மாணிப்பு நடவடிக்கைகள் எதுவும் ஆரம்பிக்கப்பட்டிராததுடன் ஒப்பந்த ஆரம்பிப்பு, இரத்துச்செய்தல் அல்லது நிர்மாண நடவடிக்கைகள் இடைநிறுத்தப்பட்டமைக்காக செயற்பட்டமைக்கு சான்றுகள் இருக்கவில்லை.

(iii) இச் செயற்திட்டத்தின் சம ஆரம்ப விழாவிற்காக விளையாட்டு அபிவிருத்தி திணைக்களத்தால் ரூபா 4,166,849 தொகை செலவிடப்பட்டிருந்ததுடன் இத் தொகை மேற்குறித்த ii ஆம் பந்தியின் பிரகாரம், அரச பொறியியற் கூட்டுத்தாபனத்திற்குச் செலுத்தப்பட்ட ரூபா 10,000,000 தொகையால் மீளளிக்கப்பட்டிருந்ததுடன் மேலும் ரூபா 5,813,151 தொகை விளையாட்டு அமைச்சிடமிருந்து அறவிடப்பட வேண்டியிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(iv) இந் நிர்மாணப் பணிக்காக 2010 ஆம் ஆண்டின் போது ரூபா 100,000,000 தொகையான மீளளிப்புத் தொகை ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் உரிய பணிக்காகப் பயன்படுத்தப்பட்டிராததுடன் இதில் ரூபா 93,200,000 தொகை வேறு 04 செலவின விடயங்களுக்கு மாற்றப்பட்டிருந்தன. ஆண்டின் இறுதியில் செலவின விடயத்தில் மேலும் ரூபா 6,800,000 தொகை எஞ்சியிருந்தது.

## 2.7 செயலாற்றல்

### (அ) விளையாட்டு உபகரணக் கொள்வனவும் பகிர்ந்தளித்தலும்

219-2-2-2103 மூலதன செலவின விடயத்தின் கீழ் 2011 ஆம் ஆண்டிற்காக விளையாட்டுப் பொருட்களைக் கொள்வனவு செய்வதற்காக ரூபா 20,000,000 தொகையான ஏற்பாடு அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன் விளையாட்டுப் பொருட்கள் கொள்வனவு செய்வதற்காக 2011 ஆம் ஆண்டின் போது ரூபா 6,292,452 தொகை செலவிடப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) விளையாட்டுப் பொருட்களைக் கொள்வனவு செய்வதற்கு உரிய வருடாந்த தேவைப்பாட்டை இனங்கண்டிராததுடன் பாதீட்டு மதிப்பீடு ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) ஏற்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்காக கடந்த ஆண்டின் செலவினத்திற்கு ஈடாகக் கோரப்பட்டிருந்தது.

(iii) இவ்வேற்பாட்டைச் செலவிடுவதற்காக திட்டமொன்று இல்லாதிருந்ததுடன் சந்தர்ப்பத்திற்கு ஏற்றவகையில் ஏற்படும் கோரலுக்காக கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(iv) 2011 ஒக்டோபர் 22 ஆம் திகதி அவ் ஏற்பாட்டில் ரூபா 7,052,894 அதாவது 35.26 சதவீதம் மாத்திரமே பயன்படுத்தப்பட்டிருந்தது.

**(ஆ) பொருட்களின் விநியோகம்**

விளையாட்டுக் கழகம், விளையாட்டுச் சங்கங்கள் மற்றும் ஏனைய வெளித்தரப்பினருக்கான விநியோகத்தை பரிசீலிக்கையில் பின்வரும் விடயங்கள் கண்டறியப்பட்டன.

(i) ஒவ்வொரு ஆண்டின் போதும் மிக உயர்ந்த பெறுமதியுடைய விளையாட்டுப் பொருட்கள் பகிர்ந்தளிக்கப்பட்டிருந்த போதிலும் விளையாட்டுப் பொருட்களை விநியோகிப்பதற்காக ஓர் முறையான நடைமுறை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) முன்னுரிமைப் பதிவேடு ஒன்று தயாரிக்கப்பட்டு அங்கீகரிக்கப்படாது பாடசாலை, வேறு அரச நிறுவனங்கள், அரசியல் பிரதிநிதிகள் மற்றும் உத்தியோகத்தர்களின் கோரலில் பகிர்வுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(iii) 2011 ஆம் ஆண்டிற்காக விளையாட்டுப் பொருட்கள் பகிர்ந்தளிக்கப்படுகையில் பல்வேறு தரப்பினரின் தலையீட்டிலும் அவர்களது தேவைப்பாட்டிலும் விளையாட்டுச் சங்கங்கள் மற்றும் ஏனைய தரப்பினருக்கு விளையாட்டுப் பொருட்கள் பகிர்ந்தளிக்கப்படுவது அவதானிக்கப்பட்டதுடன் திணைக்களத்தின் நேரடித் தலையீட்டில்

பொருட்கள் பகிர்ந்தளிக்கப்படுவது மிகவும் குறைவான நிலையில் காணப்பட்டமை.

(iv) தேவைப்பாடு தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட எழுத்து மூலக் கோரல் பொருட்களை விநியோகிப்பதற்காக சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்துடன் சமர்ப்பிக்கப்பட்டிராத சந்தர்ப்பங்கள் காணப்பட்டமை.

(v) விளையாட்டுப் பொருட்கள் விநியோகிக்கப்படுகையில் , பொருட்கள் இருப்புப் பதிவேட்டிற்கு உள்ளடக்கப்பட்டிராமை, விநியோகத்திற்காக அங்கீகாரம் பெறப்பட்டிராமை, பொருட்கள் பொறுப்பேற்கப்பட்டமைக்கு உரிய தரப்பினரால் கையொப்பம் இடப்பட்டிராமை மற்றும் விநியோகிப்புகள் உரிய பொருளின் கீழ் பதியப்படாது வேறு பொருட்களின் கீழ் பதியப்பட்டிருந்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டமை.

(vi) ஒவ்வொரு தரப்பினருக்குமோ அல்லது விளையாட்டுச் சங்கங்களுக்கு ஒரு தடவை விநியோகிக்கப்பட வேண்டிய மற்றும் விநியோகிக்கக் கூடிய ஆகக் கூடுதலான பொருட்களின் அளவு தொடர்பாக தீர்மானம் எடுக்கப்பட்டிராத காரணத்தால் பல்வேறு தரப்பினருக்கு பல்வேறு அளவுகளில் பொருட்கள் விநியோகிக்கப்பட்டிருந்தமை. இதன் காரணமாக பொருட்கள் விநியோகிக்கப்படும் முறையிலும் இது தொடர்பான கணக்கு வைத்தல் தொடர்பான முறையிலும் மோசடிகளும் தவறுகளும் ஏற்படும் இயலுமையைத் தவிர்க்க முடியாதுள்ளமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

**(இ) இருப்பு பதிவேடு முறையாகப் பேணப்பட்டிராமை**

பொருட் பெறுவனவு மற்றும் விநியோகிப்பு தொடர்பான விபரம் இருப்புப் பதிவேட்டில் பதிவு செய்கையில் பெறுவனவு மற்றும் விநியோகிப்பு அறவுகள் சரியாகவும் பெறப்பட்ட திகதியும் விநியோகிக்கப்பட்ட திகதியும் சரியாகவும் தொடரிலக்க அடிப்படையிலும் பதியப்பட்டிருக்கவில்லை. இதன் பிரகாரம் இருப்பு மீதி தவறான தன்மையை வெளிப்படுத்தப்படுவது அவதானிக்கப்பட்டது.

## 2.8 வங்கிக் கணக்குகளின் செயற்பாட்டிலான குறைபாடு

### சீராக்கப்பட வேண்டிய மீதி

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2011 திசெம்பர் மாதத்திற்காக வங்கி கணக்கிணக்கக் கூற்று தயாரிக்கப்பட்டிராததுடன் இறுதியாக 2011 செப்தெம்பருக்காக வங்கி கணக்கிணக்கக் கூற்று தயாரிக்கப்பட்டிருந்தது. ஆகையால் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சீராக்கப்பட வேண்டிய மீதி இனங்காணப்பட்டிருக்கவில்லை.

(ஆ) செப்தெம்பர் மாதத்திற்கு உரிய வங்கி கணக்கிணக்கக் கூற்றின் பிரகாரம், வழங்கப்பட்ட எனினும் கொடுப்பனவிற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிராத 120 காசோலைகளின் பெறுமதி ரூபா 978,075 ஆகக் காணப்பட்டது. இது தொடர்பாக நிதிப் பிரமாணம் 396(இ) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) சமர்ப்பிக்கப்பட்ட வங்கிக் கணக்கிணக்கக் கூற்றின் பிரகாரம், காசேட்டில் பதியப்பட்டிராத வங்கியால் மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகளின் பெறுமதி ரூபா 3,475,824 ஆகக் காணப்பட்டது. இக் கொடுப்பனவு தொடர்பாக தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.9 மனிதவள முகாமைத்துவம்

### அங்கீகரிக்கப்பட்ட பதவியணியும் உள்ளபடியான பதவியணியும்

2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஊழியர் எண்ணிக்கை தொடர்பான நிலை பின்வருமாறாகக் காணப்பட்டது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணி | உள்ளபடியான பதவியணி | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட மட்டம் | 13 | 06 | 07 |
| (ii) | மூன்றாம் மட்டம் | 02 | 01 | 01 |
| (iii) | இரண்டாம் மட்டம் | 190 | 133 | 57 |
| (iv) | ஆரம்ப மட்டம் | 48 | 41 | 07 |
| | மொத்தம் | 253 | 181 | 72 |

அலுவலக துணை ஊழியர் சேவையில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 12 ஆகக் காணப்பட்டதுடன் சேவையில் ஈடுபட்டுள்ள பதவியணி 30 ஆகும். விளையாட்டுத் திடல் உதவியாளர் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 25 ஆகக் காணப்பட்டதுடன் எந்த ஊழியரும் ஆட்சேர்க்கப்பட்டிருக்கவில்லை. இதன் பிரகாரம், 18 அலுவலக துணை ஊழியர்களின் மிகையும் 25 விளையாட்டுத் திடல் உதவியாளர்களின் பதவியணி வெற்றிடமும் நிலவியமை அவதானிக்கப்பட்டது.

**2.10 உள்ளகக் கட்டுப்பாடு**

**உள்ளகக் கணக்காய்வு**

திணைக்களத்தில் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவொன்று இல்லாதிருந்ததுடன் அமைச்சின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

**3. விளையாட்டுச் சங்கங்கள்**

**இலங்கை வூசூ சம்மேளனம் - 2008**

2006 ஆம் ஆண்டின் போது சீன அரசாங்கத்தால் அன்பளிப்பாக வழங்கப்பட்டிருந்த விளையாட்டுப் பொருட்கள் அகற்றல் (clearing) இற்காகச் செலுத்தப்பட்ட ரூபா 889,508 தொகையான அகற்றல் கட்டணம், சொத்துக்களாகக் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் உரிய விளையாட்டுப் பொருட்களின் இருப்பு பெறுமதியிடப்பட்டு கணக்குகளுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை. மேலும் நிலையான சொத்துப் பதிவேடும் பதிவுப் பொருட்களும் பேணப்பட்டிருக்கவில்லை.

**3.2 இலங்கை கரம் சம்மேளனம்**

**3.2.1 கணக்காண்டு – 2008**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) விளையாட்டுப் போட்டிகள், நிகழ்ச்சிகள், செயலமர்வுகள் மற்றும் கருத்தரங்குகளை நடாத்துவதற்காக நாட்குறிப்பொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) செலவினத்திற்காக மதிப்பீடு தயாரிக்கப்படாது விளையாட்டுப் போட்டிக்காக முற்பணம் ஒன்றைப் பெற்று செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(இ) செலவின மதிப்பீடொன்று தயாரிக்கப்படாது, 03 சர்வதேச போட்டிகளுக்காக ரூபா 3,422,580 தொகை செலவிடப்பட்டிருந்தது.

**3.2.2 கணக்காண்டு 2009**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சின்கோ கரம் போட் நிறுவகத்தின், வியாபார விளம்பரம் ஒன்றை பிரசுரித்தமைக்காக இலங்கை கரம் சம்மேளனத்திற்குக் கிடைக்கப்பெற வேண்டிய ரூபா 42,000 தொகை கணக்குகளுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிறைவேற்றுக் குழுவின் அங்கீகாரம் இன்றி 13 ஆவது சார்ப் போட்டியிலும் 3 ஆவது ஆசிய கரம் போட்டியிலும் கலந்துகொண்ட உத்தியோகத்தர்கள் மற்றும் விளையாட்டு வீரர்கள் இந்தியாவில் தங்கிய மேலதிக நாட்களுக்காக ரூபா 22,653 மேலதிகச் செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(இ) பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்களால் சில்லறைக்காசு மீதி நாளாந்தம் பரீட்சிக்கப்பட்டிராததுடன் சில்லறைக் காசு உறுதிச்சீட்டும் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் அங்கீகரிக்கப்பட்ட ரூபா 10,000 தொகையான சில்லறைக் காசுக் கட்டுநிதிக்கு மேலாக 2009 மார்ச் மாதத்தின் போது ரூபா 8,206 தொகை செலவிடப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டின் போது 2009 ஆம் ஆண்டிற்காக ஒட்டுமொத்த பாதீட்டு மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) விளையாட்டுத் தொடர்களுக்காக வெவ்வேறாக மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் அவற்றிற்காக நிறைவேற்றுக் குழுவின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

(ஊ) பயிற்சிப் போட்டி மற்றும் வெளிநாட்டுப் போட்டிக்காக மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) பயன்பாட்டிற்கு எடுக்க முடியாத ரூபா 36,525 பெறுமதியான கரம் விளையாட்டின் 730 சட்டங்கள் விதிக் கோவைகளும் பதிவழிக்கப்பட்ட ரூபா 23,731 தொகையான கடிகார இருப்புகளும் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தது.

(ஏ) காசு பொறுப்பேற்றல், காசை வங்கியிலிடல், காசோலைகள் வரைதல், வங்கிக் கணக்கிணக்கக் கூற்று தயாரித்தல், சில்லறைக் காசுக் கட்டுப்பாடு, கணக்குப் புத்தகங்களைப் பேணுவது மற்றும் இறுதிக் கணக்கைத் தயாரித்தல் என்பன ஒரே உத்தியோகத்தராலேயே மேற்கொள்ளப்பட்டிருந்தன.

## 3.3 இலங்கை டைகொன்டோ சம்மேளனம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுகையில் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கை கணக்குகளில் வெளிக்காட்டப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2004 ஆம் ஆண்டின் போது நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த தேறிய மீதி ரூபா 418,303 ஆன ஆதனங்கள், பொறிகளும் இயந்திரங்களும் 2005 ஆம் ஆண்டு முதல் நிதிக்கூற்றுக்களிலிருந்து விடுபட்டிருந்தது.

(இ) ஒலிம்பிக் சொலிடாரிடி பாடநெறிகளுக்காக தலைவரால் ஏற்கப்பட்ட ரூபா 382,000 தொகையில் ரூபா 250,000 தொகை 2009 திசெம்பர் 31 இல் உள்ளவாறும் தலைவருக்கு மீளளிப்புச் செய்யப்பட்டிருந்ததுடன் தலைவருக்கு மேலும் செலுத்தப்பட வேண்டிய மீதி ரூபா 132,000 தொகையான போதிலும் நிதிக்கூற்றுக்களில் இது ரூபா 215,970 ஆகக் காண்பிக்கப்பட்டிருந்தது. மேலும், செலவினங்களுக்கு உரித்தான பற்றுச்சீட்டுக்களின் மூலப் பிரதிகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) பின்வரும் விடயங்களுக்கு விடயங்களுக்கு உரித்தாக இவற்றிற்கு எதிரே காண்பிக்கப்பட்ட சான்றுகள் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| விடயம் | பெறுமதி | சமர்ப்பிக்கப்படாத சான்றுகள் |
|---|---|---|
| | ரூபா | |
| ஒலிம்பிக் குழுவிலிருந்து பெறப்பட்ட மானியம் | 250,000 | பற்றுச்சீட்டும் குழுவின் முகப்புக் கடிதம் |
| இலங்கை வங்கி மீதி | 30,186 | மீதிகளின் உறுதிப்படுத்தல் |
| ஹட்டன் நஷனல் வங்கி மீதி | 6,785 | மீதிகளின் உறுதிப்படுத்தல் மற்றும் 2008 ஆம் ஆண்டிற்கான வங்கிக் கூற்று |
| கூட்டுத்தொகை | 286,971 | |

## 3.4 இலங்கை டெனிஸ் சங்கம்

### 3.4.1 கணக்காண்டு – 2010

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சங்கத்தால் நிலையான சொத்துப் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இலங்கை அரசாங்கத்தால் 25 ஆண்டு காலமாக குத்தகைக்குப் பெற்றுக்கொள்ளப்பட்ட ஒரு காணியில் இலங்கை கெரம் சங்கம் இயங்கிவந்ததுடன் உரிய குத்தகை உடன்படிக்கை 2008 செப்தெம்பர் 30 இல் முடிவுற்றிருந்த போதிலும் இதனைப் புதுப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்தப்பட வேண்டிய ரூபா 11,477,500 தொகையான குத்தகை வரிக்காக ஒதுக்கங்கள் நிதிக்கூற்றுக்களில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஈ) ஊழியர் பணிக்கொடைக்காக ஒதுக்கப்பட்ட ரூபா 1,183,922 தொகை முதலீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 3.4.2 கணக்காண்டு – 2011

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) சங்கத்தால் நிலையான சொத்துப் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை.

(ii) சங்கத்தால் 1985 யூன் 01 ஆம் திகதி முதல் 2011 செப்தெம்பர் 30 ஆம் திகதி வரையான காலத்திற்காக, கொழும்பு மாநகர சபைக்குச் செலுத்தப்பட் வேண்டிய ரூபா 14,028,700 தொகையான குத்தகைக்கான ஒதுக்கங்கள் நிதிக்கூற்றுக்களில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(iii) சங்கத்தால் 1985 அன் போது 25 ஆண்டுகளாக குத்தகை அடிப்படையில் அரசாங்கத்தால் பெற்றுக்கொள்ளப்பட்ட காணிக்குரிய குத்தகை உடன்படிக்கை 1983 செப்தெம்பர் 30 ஆம் திகதி பூர்த்தியடைந்திருந்த போதிலும் உரிய உடன்படிக்கையை புதுப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.5 இலங்கை காற்பந்து சங்கம் - 2010

ரூபா 1,261,840 கூட்டுத்தொகையான 05 செலவின விடயங்களுக்கு உரித்தான பட்டோலைகள் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.6 இலங்கை மென்பந்து சங்கம் - 2010

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காசுப் பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வங்கி மீதி உறுதிப்படுத்தப்படுவதற்காக நேரடி மீதி உறுதிப்படுத்தல்கள் வங்கியால் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 3.7 இலங்கை துவிச்சக்கர வண்டி சம்மேளனம் - 2010

நிலையான சொத்துப் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை.

## 3.8 பயிலுனர் படகோட்டற் சங்கம் - 2011

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சங்கத்திற்கு உரித்தான 16 பயிலுனர் படகுகளும் 103 கணக்குகளுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2007 ஆம் ஆண்டு முதல் ரூபா 17,214 தொகையான காசு மீதி விளைவற்றுக் காணப்பட்டன.

## 3.9 இலங்கை குதிரை ஓட்டச் சங்கம் - 2011

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) நிலையான சொத்துப் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை.

(ii) ஒரு வருடத்திற்கு உரித்தான வங்கிக் கணக்கிணக்கக் கூற்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) சங்கத்தால் கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்களுக்காக பற்றுச்சீட்டுக்களுக்கும் பொருட் பட்டியல்களுக்கும் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(iv) பெறுவனவுகளுக்காக பற்றுச்சீட்டுக்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை.

(v) 18 குதிரைகள் இறக்குமதி செய்வதற்காக ரூபா 2,984,040 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் இரு குதிரைகள் ஏற்க முடியாத நிலையில் இருந்தமையாலும் இரு குதிரைகள் இந்தியாவில் இறந்தமையாலும் 4 குதிரைகள் கிடைக்கப்பெறாது போனமையால் சங்கத்திற்கு ரூபா 663,120 தொகையான நட்டம் ஏற்பட்டிருந்தது. மேலும் குதிரைகள் இறக்குமதி செய்யப்படுகையில் சுங்கக் கட்டணங்கள், கைதவிர்ப்பு, போக்குவரத்துச் செலவினம் மற்றும் நோய்த்தடுப்புச் செலவினங்களுக்காக ஏற்கப்பட்ட ரூபா 2,797,647 தொகை விலங்கியல் விஞ்ஞான சொத்துக்களின் கிரயத்திற்கு உள்ளடக்கப்படாது நிர்வாகச் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(vi) 2011 ஆம் ஆண்டிற்காக பாதீடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(vii) 2011 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட கணனி ஒன்று களவாடப்பட்டிருந்ததுடன் இதனால் நிறுவகத்திற்கு ரூபா 111,800 தொகையான நட்டம் ஏற்பட்டிருந்தது.

## 3.10 இலங்கை ஹொக்கி சம்மேளனம் - 2011

சங்கத்திற்கு தேசிய ஒலிம்பிக் குழுவினால் 2010 மே 10 ஆம் திகதி கிடைக்கப்பெற்றிருந்த ரூபா 149,300 தொகையான காசோலைகள் கணக்குகளுக்குக் கொண்டுவரப்படாது சங்கத்தின் செயலாளரால் பெறப்பட்டிருந்தது.

## 3.11 கராட்டே சங்கம் - 2011

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) 2011 ஆம் ஆண்டிற்காக பாதீடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 2011 ஆம் ஆண்டிற்கு உரித்தான வங்கிக் கணக்கிணக்கக் கூற்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் காசோலைகளாலும் காசாகவும் மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகள் காசேடு பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை.

(iii) பின்வரும் செலவினங்களுக்கு உரிய பட்டிடாலைகளைச் சமர்ப்பிக்காமையால் கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

| விடயம் | பெறுமதி<br>ரூபா |
|---|---|
| உலகக் கிண்ண மலேசியா போட்டிகள் | 100,000 |
| 2011 ஒக்டோபர் மாதக் கொடுப்பனவு | 12,000 |
| Preparation of sketch of Competition | 5,000 |
| உணவுச் செலவனிம் | 35,000 |
| கூட்டுத்தொகை | 152,000 |

(iv) 2011 சனவரி 01 ஆம் திகதி வரை சொத்துக்களினதும் பொறுப்புகளினதும் ஆரம்ப மீதிகள் கணக்குகளுக்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(v) ரூபா 388,159 தொகையான தொங்கல் கணக்கு மீதி நடைமுறைப் பொறுப்புகளின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது.

(vi) ஒக்டோபர் மற்றும் நவம்பர் மாதங்களின் மாதாந்தக் கொடுப்பனவு ரூபா 18,000 அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(vii) போட்டி வருமானத் தொகையான ரூபா 27,500 வும் அங்கத்துவத் தொகையான ரூபா 2,000 வும் குறைத்துக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தன.

## 3.12 இலங்கை உயிர்க்காப்புச் சங்கம் - 2011

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) கல்கிஸ்ஸை ஸ்ரீ தர்மபால மாவத்தையில் இல. : 21∴.21 மற்றும் கல்கிஸ்ஸை சிறிபால மாவத்தையில் இல. : 38 இல் உள்ள காணிகளும் 02 கட்டிடங்களும் சங்கத்திடம் இருந்ததுடன் அவற்றின் கிரயப் பெறுமதி ரூபா 17,266 ஆக கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்தது. இப் பெறுமதி தொடர்பாக கணக்காய்வின் போது திருப்திகொள்ள முடியாதிருந்தது.

(ii) ரூபா 561,866 தொகையான வங்கி மீதி தொடர்பாக நேரடி மீதி உறுதிப்படுத்தல்கள் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.13 இலங்கை தேசிய ரைபல் சங்கம் - 2011

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(i) நிலையான சொத்துக்கள் முறையாகப் பேணப்பட்டிருக்கவில்லை.

(ii) மூன்றாண்டு காலத்திற்கு மேலாக அறவிடப்பட முடியாதிருந்த ரூபா 496,030 தொகையான வியாபாரக் கடன்பட்டோருக்காக ஐயக்கடன் ஒதுக்கம் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(iii) பின்வரும் விடயங்கள் விடயங்களுக்கு உரித்தான இதற்கு எதிரே காண்பிக்கப்பட்ட சான்றுகள் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| விடயம் | பெறுமதி | சமர்ப்பிக்கப்படாத சான்றுகள் |
|---|---|---|
| | ரூபா | |
| இருப்பு | 132,584 | மெய்மையாய்வு அறிக்கை மற்றும் இருப்புப் பதிவேடு |
| கடன்பட்டோர் | 496,030 | உறுதிப்படுத்தல்கள் மற்றும் காலப்பகுப்பாய்வு |
| வியாபார மற்றும் ஏனைய பெறவேண்டிய விடயங்கள் | 434,289 | மீதிகளின் உறுதிப்படுத்தல்கள் |
| கடன்கொடுத்தோர் மற்றும் ஏனைய பெறவேண்டிய விடயங்கள் | 1,015,093 | உறுதிப்படுத்தல்கள் மற்றும் காலப்பகுப்பாய்வு |

(iv) 55 மில்லி மீற்றர் கைத்துப்பாக்கிகள் (free pistols) 02 உம் 04 பிரொட்டிமேர்ஸ் (protimers) பௌதீக மெய்மையாய்விற்காக கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.14 இலங்கை பிலியட் மற்றும் ஸ்னுகர் சங்கம் - 2011

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) நிலையான சொத்துப் பதிவேடு நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) ஒட்டுமொத்த சமூகப் பதிவேடும் அங்கத்தவர்களால் மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகள் தொடர்பான விபரம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) 2011 ஆம் ஆண்டிற்காக பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.